# நீலகேசி

## வைசேடிக வாதம்

<u>செய்யுள்</u>

783 ஆட்டினா ளவனையு மாக்கிச் செல்பவள்
வீட்டினார் நெறியென விரித்த மேலையோர்
காட்டினார் பலருளுங் கணாத னேயெனு
மீட்டினா னுலோகன திடத்தை யெய்தினாள்.

784 வனப்புடை மாதரைக் கண்டு மாதவன்
சினப்புடைக் கருத்தின ளென்னச் சிந்தித்தே
நினக்கினி நெறிவயி னின்ற மெய்ம்மையை
மனக்கொளக் கிளக்குவேன் மன்னுங் கேளென.

785 நெறியெனப் படுவது நின்ற மெய்ம்மையங்
கறிதலுக் கரியன வாறு சொற்பொருள்
செறியயான் சொலிற் றிரப்பியங் குணந்தொழில்
பொறியினாய் பொதுசிறப் புடன் புணர்ப்பதே.

786 பூதமைந் தொடுதிசை மனம்பொ ழுதுயி
ரோதினப் பொருள்கடா மொன்ப தாமவை
நீதியிற் குணமவற் றியல்பு செய்கையும்
போதரும் பொருட்புடை பெயர்ச்சி யாகுமே.

787 பெரியதும் பின்னது மாய தப்பொது
உரிதினிற் பொருள்களைச் செலுத்து மொற்றுமை
தெரிவுற வருவது சிறப்ப தாங்குணக்
கிரியைக ளிதற்கெனக் கிளத்தல் கூட்டமே.

788 ஆறின் முதன்மூன் றத்தி மற்றவற்
றீறின் மும்மையு மின்மையை யெய்தின
கூறின பொருள்களுங் குணனுஞ் செய்கையும்
வேறென விரித்தனன் விசேட வாதியே.

789 தத்துவ மிவையெனத் தலையுந் தூக்கினாட்
கொத்ததன் றோவென வுரைநல் லாயினி
யித்தவ மிப்பொரு டேறி யான்செயிற்
பொய்த்தவ மாதலிற் போவ னென்னவே.

790 மெய்ந்நெறி யிதுவென விரிப்பக் கேட்டிருந்
திந்நெறி யமைதியின் றென்னுஞ் சொல்லினாய்
பொய்ந்நெறி யாதலைத் தேற்றிப் போகெனக்
கைந்நிறுத் தாளது காட்டக் கேளென.

791 நிலமுதற் பூதமாய் நின்ற நான்மையுங்
குலமுதன் மூர்த்தியாய்க் கூறி னொன்றவை
யலமுதற் பொருள்களாய்ப் பன்னி னாயவை
வலமுறை யிடமுறை வருதல் காட்டுகோ.

792 உரியதோர் நீரணைந் துப்ப தாகுநெய்
யெரியெழு முளர்ச்சியா லிரைக்குங் காற்றதாம்
பெரியதோ ருருமுநீர்ப் பிண்டம் வந்துநீ;
வரிசையிற் படலமாய் வந்த வல்லவோ.

793 ஒலியதன் குணமென வுரைத்தி யாதலால்
வலியுடை நிலையில மற்றெப் பூதமும்
ஒலியொடு முதறம்முட் புல்ல லின்மையாற்
கலிசெய லொழிகநின் காய மென்றனள்.

794 சுட்டின திசைத்திறஞ் சொல்லிற் சூரியன்
பட்டது மெழுந்ததும் பற்றி நான்குமாய்
யெட்டெனப் பலவென வின்ன தன்மையாற்
கட்டினர் வழங்கினுங் காய மெய்துமே.

795 மண்டிலம் பலரையு நிறுவி மத்திமங்
கொண்டுநின் றான்றிசை கூறு மின்னென
வெண்டிசை யவன்வயிற் பிறக்கு மென்பவேற்
கண்டில நின்பொருள் காட்ட வல்லையோ.

796 அத்திசை யவனுமா யல்ல னும்மென
வெத்திசை யவர்களு மிசைப்பி னேகநீ
பத்திசெய் தினியென்னைப் பரமன் பாதமே
சித்தியு முடிவெனச் சேர்ந்து வாழ்தியே.

797 மன்னுமம் மனமெனப் படுவ தாவதே
யின்னுயி ருருவினோ டியைந்த வொற்றுமை
யின்னுமக் காலமு மிருமைத் தாகலி
னின்னுடைப் பொழுதவ ணிற்ற லில்லையே.

798 குணங்களுந் தொழில்களுங் கூறி வேறெனிற்
பிணந்தனைச் சீவனாய்ப் பெற்ற தென்னையோ
வுணர்ந்தில னுரையுமொன் றிலனெனி னுறுதிநாம்
புணர்ந்தில மவன்வயிற் போந்த தில்லையே.

799 எப்பொரு ளெக்குணத் தானு மில்லையே
லப்பொரு ளக்குணத் தயல தாதலாற்
செப்பிலக் குளிரினாற் றீய துண்மைபோற்
றுப்பெனப் பொருள்களுந் தோற்ற மில்லையே.

800 குணத்தொடு குணிகளைக் கூறி வேறெனப்
புணர்ப்பதோர் பொருளினை வேண்டிற் பொய்யெனிற்
குணத்தொடு குணிகளுங் கூட்ட மின்மையா
லுணர்த்துதற் கரிதவை யுளவு மல்லவே.

801 ஒன்பதுந் தத்தும துண்மை யாற்பல
வென்பது மெனைத்தென வெண்ணப் பட்டதும்
வன்பிதன் குணமிது வென்னப் பெற்றது
மன்பதற் குடைமையி னறியப் பட்டதே.

802 அதனது குணமதற் கயல தாதலா
லிதனது குணமென விழுக்கிற் றென்னையோ
உதனமு முணர்விலை யொன்ற தென்றக்கால்
விதனமும் படாயது மெய்யு மாகுமே.

803 கெடக்கெடும் பொருளெனிற் கேடு முண்டெனப்
படப்பெறு மதற்குநி பரிவ தென்னையோ
வடக்குந்தன் றோற்றமு மொட்டி மும்மைய
மடக்கிலு மதுபெரி தழகி தாகுமே.

804 குணங்கடாங் குணியெனுங் கூற்று முண்மையிற்
பிணங்கலாய்ப் பொருள்வயிற் பேறு முள்ளதே
யிணங்கலா யிருமைய தின்மை யுண்மையும்
வணங்கலாம் வகையதோர் மாட்சி மிக்கதே.

805 பண்பினாற் பொருள்களுக் காய பல்பயஞ்
செண்பினா னறிவினான் செறிவி னானென
மண்பொனாற் குணநிலைக் காய மாட்சியா
நண்பினா னல்லது நடத்த லில்லையே.

806 விலைபெறு நன்மையால் வெறுப்ப தீமையால்
கொலைபெறுங் களவினாற் குணத்தி னக்குண
நிலைபெறும் பொருளினா னின்ற வொற்றுமை
யலைபெறும் வேறெனி னாவ தில்லையே.

807 நல்வினைப் படுதலுந் தீவினைப் படுதலும்
பல்வினைப் பாகினாற் பயங்க ளெய்தலு
மில்வினைக் குணங்கடா மென்றும் வேறெனிற்
சொல்லில சுழற்சியும் வீடுந் தோற்றமே.

808 ஆட்டுடை யாடன வாட றாங்களு
மோட்டுடைக் குதிரையு மோட்டு மென்றின்ன
கூட்டிய வப்பொருட் கொடைய வாதலான்
மீட்டவை யொன்றென வேண்டல் வேண்டுமே.

809 கூத்த ராடலுங் குதிரை யோடலு
மோத்துரை யுள்பட வொழிந்த யாவையு
நீத்தன வேயல்ல நிலையு முண்மையிற்
போத்தரல் வேண்டினப் பொழுதி னாகுமே.

810 பிணங்கல வாய்த்தம்முட் பிறக ளாகிய
குணங்களுந் தொழில்களுங் குழுமிக கெட்டன
புணர்ந்துடன் பொருள்வயிற் போந்த வாறுநீ
யுணர்ந்திலை யதுவுநின் னுடைய தேபிற.

811 பாதுவெலாப் பொருளொடும் பொருந்தி நின்றதே
லதுவெலாப் பொருள்களை யாக்கு மொற்றுமை
யிதுவலா லவைதம்மு ளியைத லில்லையேல்
செதுவலாம் பிறவது சென்ற தென்றலே.

812 அன்றியும் பொதுவது வந்தமில் பொருட்
சென்றதே யென்றலாற் சிதர்ந்து பன்மையாய்க்
குன்றியுங் கூடியு நின்றுங் கொள்பய
மின்றியும் போதலா லென்னை யாயதோ.

813 பொதுவெனப் படுவதோர் போலி யாதலாற்
பொதுவெனப் படுவன போன்ற தாங்களே
யதுவென மீட்டிருந் தாறென் றெண்ணுவா
யிதுவென வென்னையிங் கிதனோ டேழெனாய்.

814 சிறப்பெனப் படுவது தெரியி னப்பொரு
ளறப்பெற நின்றவக் குணம தாதலின்
இறப்பவு மிதுதன தின்மை யேயினாய்
புறப்படுத் திடுவனுன் பொருள ளெண்ணலே.

815 கூட்டினா லல்லது கூட்ட மில்லையேற்
கூட்டுவான் செல்வதுங் கூட்ட மில்லையே
பாட்டினாற் பலவுமாம் பயமி லாதன
மூட்டினா லுரைத்தியோ முனிவு போக்கிதோ.

816 கொக்கொடக் கருமையைக் கூட்டு வித்தலுஞ்
சுக்கொடத் துவர்ப்பினைத் துன்னு வித்தலுஞ்
சிக்கென வேற்றுமை தீர்ப்பி நீயென
நக்கன ளளியனோ நயவ னென்னவே.

817 என்றுமப் பொருள்களு மியல்புந் தங்களோ
டொன்றென வருதலா லொன்று மாகுமே
யென்றலி லிருமையுந் தெரியி னின்மையா
லின்றினிக் கூட்டுவ தில்லை யில்லதே.

818 ஒன்றுநற் பொருள்கடாங் குணங்க டாம்பல
வென்றுநீ யேகம் வேறென்ப தென்னெனப்
பொன்றுமக் குணமெனிற் பொருட்கு மாமென
நன்றினிக் குணமுண்மை நாட்ட மாமென.

819 குணிக்கணா னோக்கினாற் குணங்க ளில்குணத்
தணிக்கணா னோக்கினா லதுவு மன்னதே
பிணிக்கலாம் பிரிக்கலாம் பெற்ற நான்மையிற்
றுணிக்கலாந் துருநெறி துன்னு நன்மையே.

820 இல்லையக் குணங்குணிக் குண்மை தானெனச்
சொல்லினக் குணிகுணத் தொன்று மாதலா
லல்லதக் குணங்களு மவைக ளாமென
நல்லதித் துணிவென நயத்தி லெய்தினான்.

821 பொருளொடக் குணந்தொழிற் குண்மை யொன்றெனத்
தெருள்வது மும்மையிற் றெரிய வைப்பது
மருளுடை யறநெறி யண்ணல் சேவடி
யிருள்கெட நினைத்தலு மினையை யாகென.

822 ஓம்படுத் துலோகனை யொழியச் சொல்லியான்
காம்புடைக் கடநெறி கடப்ப னென்னவே
பேம்படுப் பவரொடும் பிரிவின் னாமையைத்
தேம்படு கிளவிநீ சிந்தி யென்னவே.

823 ஒக்குமவ் வுரையென வுள்ள தேயென
நக்கன ளாகிய நாதன் சேதியஞ்
சிக்கென வேத்துதல் சிறந்த தென்னவே
தக்கதென் றவன் சொலத் தானு நீங்கினாள்.

## உரை

சாங்கிய ஆசாரியனை விடுத்து நீலகேசி, வைசேடிக சமயத்தலைவராகிய லோகஜிதர் குடிலை (ஆசிரமத்தை) அடைந்தாள். அவர் வைசேடிக முதல்வராக கணாத முனிவருடனேயே ஒப்பானவர் என்று சொல்லத்தக்க அளவு, அறிவாராய்ச்சியும் புகழும் உடையவர். அவர் தம் நெறியின் அடிப்படைக் கொள்கைகள் விரித்துக் கூறலானார்.

லோகஜிதர் : எங்கள் சமயக் கோட்பாட்டின்படி பொருண்மைகள் ஆறு. பருப்பொருள் (திரவியம்) பண்பு (குணம்), செயல் (கர்மம்) தொகை (சாமான்யம்), வகை (விசேஷம்) கோப்பு (சமவாயம்) என்பன. அவற்றுள் பருப்பொருள்களாவன: மூலப்பொருள்கள் ஐந்து, திசை, மனம், காலம், உயிர் ஆகிய ஒன்பதும் ஆகும். பண்பும் செயலும் பருப்பொருள்களைச் சார்ந்து நிற்பவை. தொகை பெருந்தொகை உள்ளுறைதொகை என இருவகை. முன்னது பொருளின் உண்மை அல்லது இருப்பை உணர்த்தும், பின்னது பொருள்களில் உள்ளீடாக உள்ள பொதுப் பண்புகளைக் குறிக்கும். இத்தொகை என்றும் நிலையாய், பொருள்களின் ஒருமைப்பாட்டுக்கு உதவுவதாகும். வகைவேற்றுமைகளுக்கு அடிப்படைக் காரணமாயிருப்பது கோப்புப் பொருள்களுடன் அவற்றுக்குரிய பண்புகளையும் செயலையும் இணைப்பது. முதல் மூன்று பொருண்மைகளும் மட்டும் தனி இருப்பு உடையவை. மற்றவை சார்பு நிலையின.

நீலகேசி : பருப்பொருள்கள் ஒன்பது என்று வகுத்திருக்கிறீர்கள். அவற்றுள் மண், நீர், அனல், காற்று ஆகிய முதல் நான்கும் ஒருவகையே. உலகியல் மரபுப்படி நான்காம் எனில், மண்வகைகளும் பிரிக்கப்படவேண்டும்.

ஒலி வானியல்பாகக் கூறப்படுகிறது. ஆனால் அது பருப் பொருளணுக்களின் உராய்வால் ஏற்படுகிறது. வானில் இயல்பு என்பதைவிட, வெளியின் இயல்பு என்பதுகூடச் சால்புடையது. எடை பருப்பொருள் தொடர்புடையது அன்று எனின், மணியை அடிப்பதனால் ஓசை உண்டாவதை என்னென்பது? வானம் பருப்பொருளன்று; அழியாதது; எங்கும் நிறைந்தது. ஆனால் ஓசையோ வரையறைப்பட்ட பரப்பும் கால எல்லையும் உடைய, பருப்பொருள் தன்மை உடையது.

திசை பருப்பொருளுடனொப்பத் தனிப்பொருளாகக் கூறப்பட்டது. ஞாயிறு முதலிய பொருள்களின் நிலைகளுடன் தொடர்புப்படுத்தினாலன்றி அது அறியொணாதது. அது இடவெளியின் ஒரு முறையேயன்றித் தனிப்பொருளன்று. தெற்கு மேற்கு என்ற திசையும், வலம் இடம் என்பதும், உறவு என்ற முறையிலும் தனி நிலையுடையவையல்ல. ஒன்றின் நிலை ஒன்றுக்குக் கிழக்கு என்றால், மற்றொன்றுக்கு மேற்கு ஆகும். ஒன்றுக்கு இடமுள்ள பொருள் மற்றொன்றை நோக்க, வலம் ஆகும். இவை பொருள்களின் பலவகைச்சார்பு விளக்கங்களே (Predicals) அன்றி வேறல்ல.

மனம் என்பதும் ஆன்மாவின் இயக்கமேயன்றித் தனிப்பொருள் அன்று. மனம் தனி வகையில், அதனால் அறியப்படும் புல உணர்வுகளும், தனி நிலைகளாய்ப் பருப்பொருள்கள் என்பது ஆகாது, பதினான்கு ஆகும். காலம் என்பதும் இதுபோலப் பொருள்களின் இயக்கத்தினால் ஏற்படும் தொடர்புகளுள் ஒன்றே. குணம், செயல் அகியவை பொருளுடமன் ஒன்றுபட்டே உயிருக்கு உணர்வளிக்கிறது. இவ்வுணர்வுக்கான கொள்ளின் உயிரும் பொருளும் இயக்கமற்ற பொருள்களாகின்றன. அறிவும் செயலும் உயிரின் இணையறாப் பண்பேயன்றி, கோப்பினால் ஏற்படும் தன்மைகளல்ல.

லோகஜிதன் : பண்பும் பண்பியும் ஒன்றானால், ஒன்று அழியும்போது மற்றதும் அழியவேண்டும். பச்சோந்தியின் நிறங்களுள் ஒன்றழியும்போது பச்சோந்தி அழிவதில்லையே. ஆகவே, இரண்டும் வேறு என்று ஏற்படுகிறது. மனிதனிடமிருந்து இளமை போயினும் மனிதன் அழிவதில்லை. முதுமைதாங்கி நிலைபெறுகிறான். சுருண்டிருந்த பாம்பு ஊரத் தொடங்கினால், சுருளுரு நீங்கும் பாம்பு நீங்குவதில்லையன்றோ?

நீலகேசி : பண்பில்லாத பொருளில்லை. அது அறியப்படவும் முடியாது. அதோடு தனிப் பொருளாயின் பருப்பொருளிலிருந்து பிரித்துத் தனிவகையாகத்தான் கருதப்படுவானேன். பருப்பொருளிலேயே அடக்கப்படலாமே! உண்மையென்னவெனில், பொருள் தொடர்பும் நிலையும் உடையது. பண்புகள் அதனுடன் தொடர்புடையவையாய் மாறும் இயல்புடைய தன்மைகள். இரண்டும் பொருள் வகையில் ஒன்று; தன்மை, தோற்றவகையில் வேறுபாடுடையவை.

பண்பும் செயலும் கோப்பினால் பொருளுடன் இணைவு உடையவை என்கிறீர்கள். இணைவு ஏற்படுமுன் அவற்றிற்கு நிலை ஏது? உள்பொருளாயின், பொருள் தொடர்பு இல்லாதபோது நிலைபெறுவது எவ்வாறு? இல்பொருளாயின், கோப்புக்கு உரியதாகாது!

தொகை என்பது அறிவால் அறியப்படும் பண்புகளின் பொதுத்தன்மையன்றித் தனியாய் இருப்பதன்று. எல்லாப் பொருள்களிலுமே வேறுவேறு பொதுப்பண்புகள் இருக்கின்றனவாதலால், எல்லாம் தொகைகளாதல் வேண்டும். தொகை வகைகள் ஓர் உறவேயன்றி வேறன்று ஒரு முறையில் தொகையாவது இன்னொரு முறையில் வகையாகும்.

லோகஜிதன் : பண்புகளில் கூடுதல் முறைகள் உண்டு. தித்திப்புப் பொருள்களில் மிகுதித் தித்திப்பும், குறைந்த தித்திப்பும் அறியப்படுகின்றன. தொகை அவ்வாறு அறியப்படாது.

நீலகேசி : பொதுப் பண்புகளினால் ஏற்படும் தொகுதியே தொகையாதலால், அதிலும் கூடுதல் குறைகள் உண்டு. எடுத்துக்காட்டாகக் குதிரை என்ற தொகையில் பொதுப் பண்புகளின் உயர்வு தாழ்வுகளால் உயர்வகைக் குதிரை, தாழ்ந்தவகைக் குதிரை என்ற படிப்படியான வேறுபாடு காணலாம். தொகை, வகை ஆகியவை பண்புகளின் பொதுமை, வேறுபாடுகளேயன்றி வேறல்ல. தனிப் பொருள்களாயின், எல்லாப் பொருள்களும் எல்லாப் பண்புகளுடனும் சேர இடந்தரவேண்டும். வெண்கொக்குப் போல் கருங்கொக்கும், பறக்கும். பறவைபோல் பறக்கும் விலங்கும் இருத்தல் கூடியதாகவேண்டும்.

கோப்பு நிலையுடைய (சத்) அன்று என்று நீங்களே ஒப்புக்கொள்வதால், அதுவும் தனிப்பொருளன்று.

லோகஜித்தன் : பொருள் ஒருமை உடையது, நிலையாயானது. பண்புகள் பன்மை வாய்ந்தவை. நிலையற்றவை, இரண்டும் ஒன்றாதல் பொருந்தாது. பொருள் பண்பாயின் பண்புகள் ஒன்றாகம். பண்புபோல் பொருளும் அழியும்.

நீலகேசி : பண்பு பொருள் என்று நான் கூறவில்லை; பொருள் சார்ந்தது. பல பண்புகள் ஒரு பொருள் சார்ந்து ஒரே நேரத்திலும் அறியப்படலாம். பாற்கட்டி என்ற ஒரே பொருள், வெண்மையாகவும் பெரியதாகவும் தித்திப்பாகவும் இருக்கலாம். ஒவ்வொரு நேரம் ஒரு பண்பு பிரித்தறியப்படும். ஆகவே, பன்மைவாய்ந்த பண்புகளும், நிலையற்ற பண்புகளும், ஒரு நிலையான பொருளைச் சார்ந்து அறியப்படுதல் பொருந்துவதேயாகும்.

ஒரே பொருளே தொகையாகக் கருதப்படும்போதும் சில பண்புகள் கருத்தில் முந்தும்; வகைகளாகக் கருதப்படும் போது, அவை மறைந்து வேறு கருத்துக்கள் முன்வரும். தென்னையை மரம் என்று கூறும்போது மரப்பொதுப் பண்பும், தென்னைவகை என்று கருதும்போது கிளையற்றது, இறகு வடிவ ஓலை முதலிய சிறப்புப் பண்புகளும் கருத்தில் இடம்பெறும்.

நீலகேசி கூறிய உண்மைகளின் திட்டத்தை உணர்ந்து, லோகஜிதன் மனமாறி அவளுக்குத் தலைவணங்கிச் சமண நெறியே பெற்றான்.